ஆகஸ்ட் 18

மனன வசனம்

**கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலே அவர்கள் இரட்சிக்கப்படுகிறது எப்படியோ, அப்படியே நாமும் இரட்சிக்கப்படுவோமென்று நம்பியிருக்கிறோமே. அப்போஸ்தலர் 15:11.**

ஆராய்ச்சிக்கு

*அப்போஸ்தலர் 15; கலாத்தியர் 2:11-13; யாத் 12:43-49; ரோமர் 3:30; லேவி 18:30; வெளி 2:14,20.*

ஆகஸ்ட் 18 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

பாடம் 8

# எருசலேம் ஆலோசனைச் சங்கம்



இரண்டு வருடங்களுக்கும் மேலாகக் கடந்த நிலையில்பவுலும்பர்னபாவும்மீண்டும்சிரியாவிலுள்ள அந்தியோகியாவிற்குத் திரும்பினார்கள். அங்கிருந்த சபையார் அனைவரும் சேர்ந்துதான் அவர்களை நற் செய்தி ஊழியத்திற்காக அனுப்பிவைத்தார்கள்; எனவே, தங்கள் ஊழியஅறிக்கையை அறிக்கையைச் சமர்ப்பிக்கிறார்கள். அறிக்கையில், தாங்கள் சாதித்த வற்றை அவர்கள் முக்கியப்படுத்தவில்லை; மாறாக, தங்கள்மூலமாக தேவன்தாமே செய்தவற்றை முக்கியப் படுத்தினார்கள்.

அநேக யூதர்களும் விசுவாசத்தைத் தழுவியிருந் தாலும், அந்த அறிக்கையின் நோக்கம், புறஜாதியார் மத்தியில் நற்செய்தி ஊழியம் வெற்றிகரமாக அமைந் தது என்பதே. கொர்நேலியு அனுபவத்திற்குப்பிறகு, புறஜாதியார் விருத்தசேதனம்பண்ணாமல் மனமாறி வந்தது ஒரு பெரிய பிரச்சனையாகவே இருந்தது. அப் 11:1-18. ஆனால் இப்போது, புறஜாதியாரில் அநேகர் சபையில் சேர்க்கப்பட்டதால், பிரச்சனை மேலும் பெரி தாகியது. எருசலேமிலிருந்த விசுவாசிகள் பலருக்கு அது பிடிக்கவில்லை. புறஜாதியார் முதலில் விருத்த சேதனம்பண்ணவேண்டும்; அதாவது, யூதமரபுகளைத் தழுவி, யூதமார்க்கத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும், அப்போதுதான்தேவமக்களில்ஒருவராகி,தங்களோடு அந்நியோந்நியமாக இருக்கமுடியுமென்றார்கள்.

புறஜாதியார் குறித்த இந்தப் பிரச்சனை உச்சக்கட் டத்தை அடைந்ததும், அதற்கு ஒரு தீர்வுகாண சபைத் தலைவர்கள் ஒன்றுகூடினார்கள்; அதுபற்றி அப் 15 சொல்கிறது. அப்போஸ்தல சபை வரலாற்றில், உலக ளாவிய நற்செய்தி ஊழியத்தில் ஒரு திருப்புமுனையாக எருசலேம் ஆலோசனைச் சங்கக் கூட்டம் இருந்தது.

*2018, ஆகஸ்ட் 25 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

ஞாயிறு, ஆகஸ்ட் 19

## பிரச்சனையாகியிருந்த விஷயம்

அந்தியோகியா சபையில் ஆரம்பம் முதலே கிரேக்க மொழி பேசின யூதர்களும், விருத்தசேதனம் பண்ணாத புறஜாதியாரும் இருந்தார்கள். அப் 11:19-21; கலா 2:11-13. அவர்களுக்குள் நல்ல ஐக்கியம் இருந்தது. எருசலேமிலிருந்து சில விசுவாசிகள் வந்து, அந்த ஐக்கியத்தில் குழப்பத்தை உண்டாக்கினார்கள்.

**சபையில் உண்டாகியிருந்த பிரச்சனை என்ன? அப் 15:1–5.**

யூதேயாவைச் சேர்ந்த அவர்கள் யூதமார்க்கத்தார் என்று அழைக்கப்பட்டார்கள்; அவர்களைத்தாம் பரிசேயர்களில் விசுவாசிகளாக இருந்தவர்கள் என்று 5ஆம் வசனம் சொல்கிறது. பவுலும் தான் மனமாறுவதற்குமுன் ஒரு பரிசேயனாகத்தான் இருந்தார்; எனவே சபையில் பரிசேயர்கள் காணப்பட்டதில் ஆச்சரியம் எதுவுமில்லை. பிலி 3:5. யாரிடமும் அனுமதிபெறாமல் அந்தியோகியாவிற்கு அவர்கள் சென்றிருக்க வேண்டும். அப் 15:24. இன்னொரு சம்பவமும் அந்தியோகியாவில் நடக்கிறது. விருத்தசேதனம் பண்ணாத புறஜாதியார் சபையில் இருந்ததால், அப்போஸ்தலர் உட்பட பெரும்பாலான யூதர்கள் அசௌகரியமடைந்தார்கள். கலா 2:11-13.

யூதமார்க்கத்தார்பற்றி பவுல் நல்லவிதமாகச் சொல்லவில்லை; அவர்களை, ‘கலகக்காரர், கள்ளச்சகோதரர்’ என்று அழைக்கிறார். கலா 1:7; 5:10; 2:4. நற்செய்தியால் கிடைக்கும் ஆவிக்குரிய சுதந்தரத்தை நசுக்குவதும், மனமாறின புறஜாதியாரை கிரியைத்துவத்திற்கு அடிமைகளாக்குவதும்தான் இந்தக் கள்ளச் சகோதரருடைய நோக்கமாக இருந்தது.

‘புறஜாதியார் விருத்தசேதனம்பண்ணி, யூத சடங்காச்சாரப் பிரமாணங்கள் அனைத்தையும் கைக்கொள்ளாவிட்டால், அவர்கள் இரட்சிக்கப்படமுடியாது’ என்பதே அவர்களுடைய வாதம். ‘தேவனுடைய உடன்படிக்கை மக்கள் மட்டுமே இரட்சிப்புக்குப் பாத்திரர்கள்; பழைய ஏற்பாட்டின்படி, விருத்தசேதனம் பண்ணிக்கொண்டாலொழிய தேவன் தெரிந்துகொண்ட மக்களில் ஒருவராக ஆக முடியாது’ என்றார்கள். ஆதி 17:9-4; யாத் 12:48. சுருக்கமாக, ‘யூதமரபுகளைக் கைக்கொண்டால்தான், புறஜாதியாருக்கு இரட்சிப்பு’ என்றார்கள்.

அந்த நிபந்தனைகள் நற்செய்தியின் தன்மைக்கு எதிரானவை என்பதால், பவுலும் பர்னபாவும் அவற்றை எதிர்த்தார்கள். யூதேயாவிலிருந்து வந்தவர்கள் முட்டாள்தனமாக நடந்துகொண்டதால் பயங்கர வாக்குவாதம் உண்டாயிற்று; அங்கு ‘கருத்துவேறுபாடு’ அல்லது ‘முரண்பாடு’ உண்டானதாக அப் 15:2இல் உள்ள **ஸ்டஸேல்** என்கிற கிரேக்க வார்த்தை சுட்டிக்காட்டுகிறது. அங்குள்ளவர்களே பேசித்தீர்க்கும் அளவுக்கு இலேசான பிரச்சனையல்ல அது. சபையின் ஒற்றுமை கேள்விக்குரியதாயிற்று. அதனால்தான், அந்தியோகியாவிலிருந்த சகோதரர்கள், பவுல் மற்றும் பர்னபா உட்பட பிரதிநிதிகள் சிலரை எருசலேமிற்கு அனுப்பி வைக்கத் தீர்மானித்தார்கள்.

நீங்கள்தாம் அந்த யூதர்கள் என்று வைத்துக்கொள்வோம்; உங்களுடைய வாதத்தை நிரூபிக்க என்னென்ன கருத்துகளைக் கூறுவீர்கள்?

## விருத்தசேதனம்

பிரச்சனைக்கான முக்கிய காரணங்களுள் ஒன்று விருத்தசேதனம். இந்தச் சடங்கு மனிதர்கள் ஏற்படுத்தியதல்ல. ஆபிரகாமின் சந்ததியாரை தேவன் தெரிந்துகொண்டு, அவர்களோடு செய்த உடன்படிக்கைக்கு அடையாளமாக அவர்தாமே விருத்தசேதனத்தைக் கட்டளையிட்டிருந்தார். ஆதி 17:9-14. இது தவிர, மனிதர் ஏற்படுத்திய சடங்குகளும் அவர்களிடம் இருந்தன. மத் 15:2,9.

**இஸ்ரவேலர்தவிர வேறு யாரும் விருத்தசேதனம் பண்ணினார்கள்? யாத் 12:43–49.**

உடன்படிக்கையின் ஆசீர்வாதங்கள் இஸ்ரவேலருக்குமட்டுமே உரியவை அல்ல; அடிமைகளும் பரதேசிகளும்கூட விரும்பினால் பெறமுடியும்; அதற்கு அவர்கள் விருத்தசேதனம் பண்ணிக்கொள்ளவேண்டும். விருத்தசேதனம் பண்ணின எந்த அந்நியனும் இஸ்ரவேலனுக்குள்ள அதே அந்தஸ்தைப் பெறுவான். 'அவன் சுதேசியைப் போல் இருப்பான்.' யாத் 12:48.

எனவே, தேவனுடைய உடன்படிக்கை குடும்பத்தில் முழு உறுப்பினராவதற்கு ஆண்கள் விருத்தசேதனம் பண்ணவேண்டியது அவசியமாக இருந்தது. இயேசுவானவர் இஸ்ரவேலின் மேசியா; எனவே, புறஜாதியான் ஒருவன் முதலில் ஒரு யூதனாக மாறாமல், அவருடைய இரட்சிப்பைப் பெறமுடியாதென யூதமார்க்கத்தார் வலியுறுத்திவந்தார்கள்.

**விருத்தசேதனம்பற்றி பவுலின் புரிதல் எப்படிப்பட்டது? ரோமர் 3:30; 1கொரி 7:18; கலா 3:28; கலா 5:6.**

முதலில் யூதமார்க்கத்தில் சேராமல் இரட்சிப்பு இல்லை என்று உடன்படிக்கையையும் இரட்சிப்பையும் குழப்பினார்கள். தேவனுடைய உடன்படிக்கை குடும்பத்தில் உறுப்பினராவதால்மட்டுமே இரட்சிப்பு கிடைத்துவிடாது. எரே 4:4; 9:25,26. ஆபிரகாமும்கூட தான் விருத்தசேதனம் பண்ணப்படுவதற்கு முன்னரே, விசுவாசத்தால் இரட்சிக்கப்பட்டார். விருத்தசேதனம் பண்ணி இதைப் பெறவில்லை. ரோமர் 4:9-13. விசுவாசத்தால்மட்டுமே இரட்சிப்பைப் பெறமுடியும். ஆனால் உடன்படிக்கையோ, தேவனையும் இரட்சிப்பின் திட்டத்தையும் உலகம்முழுவதிற்கும் வெளிப்படுத்துவதற்காக தேவன் கொடுத்ததாகும். இதற்காகவே இஸ்ரவேலர் தெரிந்துகொள்ளப்பட்டார்கள். ஆதி 12:1-3.

உடன்படிக்கை இல்லாமல் இரட்சிப்பு இல்லை என்பதால், விருத்தசேதனத்தால் புண்ணியம் கிடைப்பதாக இவர்கள் நினைத்தார்கள். மனித கிரியை செயல்படும் இடத்தில் தேவனுடைய இரட்சிப்பின் கிருபை செயல்படுவதில்லை. எனவே, விசுவாசிகளான புறஜாதியார் இரட்சிக்கப்பட அவர்கள் விருத்தசேதனம் பண்ணவேண்டும் என்று வற்புறுத்திய செயல் நற்செய்தியைப் புரட்டியது. கலா 1:7: 2:3-5. தேவகிருபையை அவமாக்கியது. கலா 2:21. இயேசுவால் பயனில்லாததுபோலக் காட்டியது. கலா 5:2. மேலும், இரட்சிப்பு எல்லாருக்கும் உரியது என்பதை மறுதலித்தது. கொலோ 3:11; தீத்து 2:11.

'சரியான ஒரு சபையில் உறுப்பினராக இருந்தால்போதும்; இரட்சிப்பைப் பெறமுடியும்' என்று நினைப்பதிலுள்ள ஆபத்து என்ன?

## செவ்வாய், ஆகஸ்ட் 21

## விவாதம்

**எருசலேமில் நடைபெற்ற விவாதத்தின்போது பேதுரு பேசியது என்ன? அப் 15:7–11.**

---

கூட்டத்தின் நடவடிக்கைகள் எல்லாவற்றையும் லூக்கா எழுதவில்லை. யூதர்கள் தங்கள் விவாதத்திற்கு எவற்றையெல்லாம் ஆதாரமாகக் கூறினார்கள்? அப் 15:5. அதற்கு பவுலும் பர்னபாவும் எப்படிப் பதிலளித்தார்கள்? அப் 15:12. இவை விலாவாரியாகத் தெரிந்தால் நன்றாகத்தான் இருக்கும். ஆனால், பேதுருவும் யாக்கோபும் பேசினவற்றைமட்டுமே லூக்கா எழுதுகிறார்; அப்போஸ்தலர்களில் அவர்கள் முக்கியமானவர்களாக இருந்திருப்பது தெரிகிறது.

சில வருடங்களுக்கு முன்பு கொர்நேலியுவைச் சந்தித்த அனுபவத்தை அங்கிருந்த அப்போஸ்தலர்களுக்கும் மூப்பர்களுக்கும் பேதுரு சொல்கிறார். முன்பு, ஒருசமயமும் இதே சம்பவத்தை பேதுரு சொல்லியிருக்கிறார். அப் 11:4-17. கொர்நேலியு விருத்தசேதனம் பண்ணாத ஒரு புறஜாதியான்; ஆனால், அவரது மனமாற்றத்தை தேவன் ஏற்றுக்கொண்டார்; பெந்தெகொஸ்தே நாளில் அப்போஸ்தலர்களுக்கு அருளின அதே ஆவியின் ஈவை கொர்நேலியுவுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் தேவன் அருளினார்.

இரட்சிப்பைப் பொறுத்தவரையில் யூதனென்றும் புறஜாதியானென்றும் பாகுபாடே கிடையாது என்பதை யூதவிசுவாசிகளுக்கு உணர்த்துவதற்கு தேவன் தம் ஞானத்தினால் பேதுருவைப் பயன்படுத்துகிறார். பழைய உடன்படிக்கையின் சட்டத்திட்டங்களைக் கைக்கொண்டு, புறஜாதியார் அதன் சுத்திகரிப்பு பலன்களைப் பெறவேண்டிய அவசியம் இல்லை; விசுவாசித்தால் தீட்டுள்ளவர்களாக எண்ணப்படமாட்டார்கள்; தேவன்தாமே அவர்களுடைய இருதயங்களைச் சுத்திகரிக்கிறார். பவுல் சொல்வதைத்தான் பேதுருவின் இறுதி வார்த்தைகள் தொனிக்கின்றன: ‘கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலே அவர்கள் இரட்சிக்கப்படுகிறது எப்படியோ, அப்படியே நாமும் இரட்சிக்கப்படுவோமென்று நம்பியிருக்கிறோமே.’ அப் 15:11.

**புறஜாதியார் குறித்து எழுந்த பிரச்சனைக்கு யாக்கோபு முன்வைத்த தீர்வு என்ன? அப் 15:13–21.**

யாக்கோபுக்கு இருந்த அதிகாரம் அவருடைய பேச்சில் வெளிப்படுகிறது. அப் 12:17; 21:18; கலா 2:9,12. தாவீதின் சந்ததி மீண்டும் நிலைநிறுத்தப்படுமென ஆமோஸ் தீர்க்கதரிசி சொன்னதை யாக்கோபு சுட்டிக்காட்டுகிறார். ஆமோஸ் 9:11,12. மறுசீரமைக்கப்பட்ட ‘தேவபிள்ளைகளுடன்’ புறஜாதியாரும் சேருவதற்கான வழியைத் தேவன் உண்டுபண்ணியிருக்கிறார்; எனவே அவர்களும் இஸ்ரவேலரோடு இணையலாம் என்பதே யாக்கோபின் முக்கியக் கருத்து.

இஸ்ரவேல் தேசத்தில் குடியிருக்க விரும்பும் பிற அந்நியர்களிடம் எதிர்பார்ப்பதுபோல, மனமாறிய புறஜாதியாரிடம் எந்தக் கட்டுப்பாடுகளையும் சுமத்தக்கூடாதென்று யாக்கோபு தீர்மானமாகச் சொல்லுகிறார்.

## அப்போஸ்தல கட்டளை

**மனமாறிய புறஜாதியார் செய்யக்கூடாதவை என்று ஆலோசனைச் சங்கம் தீர் மானித்த நான்கு விஷயங்கள் யாவை? அப் 15:28,29.**

ஆலோசனைச் சங்கம் கூட்டப்பட்டதின் நோக்கம் நிறைவேறியது; சபை யில் சேரும் புறஜாதியார் விருத்தசேதனம் பண்ணவேண்டாம். ஆனாலும் அவர் களுக்கு விலக்கப்பட்ட நான்கு விஷயங்கள் உண்டு.

1. அஞ்ஞான பண்டிகைகளின் போது விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டு, பிறகு கோவில் விருந்தில் பரிமாறப்படுகிற அல்லது சந்தையில் விற்கப் படுகிற மாமிசம்
2. இரத்தம் புசித்தல்
3. நெருங்குண்டு செத்த மிருகங்கள், அதாவது இரத்தம் வடிக்கப்படாத மாமிசம்
4. சகல வகையான வேசித்தனங்கள்

உணவு குறித்த முதல் மூன்று தடைகளும் தற்காலிகமானவை என்று அநேக கிறிஸ்தவர்கள் இன்று வாதிடுகிறார்கள். அவற்றை யூதர்கள் வெறுத்தார்கள். எனவே, அவர்களைச் சமாதானம்பண்ண அவ்வாறு சொல்லப்பட்டதாம். மேலும், இங்குக் குறிப்பிடாத பழைய ஏற்பாட்டின் மற்ற பிரமாணங்கள், லேவி யராகமத்தின் உணவுக் கட்டளைகள், ஓய்வுநாள் கட்டளை போன்றவையும்கூட இன்று கிறிஸ்தவர்களுக்குப் பொருந்தாதாம். லேவி 11; யாத் 20:8-11

இந்த அப்போஸ்தலக் கட்டளை தற்காலிகமானதோ, பழைய ஏற்பாடு சம் பந்தப்பட்ட அனைத்தையும் ஒதுக்கிய புதிய நன்னெறிச் சட்டமோ அல்ல. அந் நிய நாட்டிலிருந்து இஸ்ரவேலில் குடியேறினவர்களுக்காக லேவி 17-18 சொல் கிற சட்டங்களையே அப்போஸ்தலர்களும் சபை மூப்பர்களும் ஆவியானவரின் வழிநடத்துதலின்படி அங்கே மீண்டும் வலியுறுத்தினார்கள். அப் 15:28.

இஸ்ரவேலில் வாழ விரும்புகிற அந்நிய நாட்டவர், தாங்கள் பழகியிருந்த அஞ்ஞான நடைமுறைகள் அனைத்திலுமிருந்து விலக வேண்டியிருந்தது. அஞ்ஞான மார்க்கத்தை நாடாமலிருக்க லேவியராகமம் அவற்றைத் தடை செய் கிறது. லேவி 18:30. அதுபோல, சபையில் சேர விரும்பின விசுவாசமுள்ள புற ஜாதியாரும் அஞ்ஞானமார்க்கத்தை ஒதுக்கவேண்டியிருந்தது.

ஓய்வுநாள், தீட்டான உணவை விலக்குதல் போன்றவை சடங்காச்சாரம் சாராதவை: மோசேக்கு முன்னரே கொடுக்கப்பட்டவை. ஆதி 2:1-3; ஆதி 7:2 எல்லாருக்கும் பொதுவானவை. சபையில் சேருகிறவர் இவை அனைத்திற்கும் கீழ்ப்படிந்து, தேவ சித்தத்தை நிறைவேற்றவேண்டும்.

அந்தக் கட்டளை தற்காலிகமானது அல்ல என்பதை வெளி 2:14,20 தெளி வுப்படுத்துகிறது. அங்கே முதலாவது, நான்காவது கட்டளைகள் வருகின்றன; அதன்மூலம் மற்ற இரண்டு கட்டளைகளும் செல்லுபடியாவது உறுதியாகிறது. தொடர்ந்து கிறிஸ்தவர்கள் இந்த அப்போஸ்தல கட்டளையைக் கைக்கொண்டு வந்ததாக வரலாற்றில் ஆதாரம் உள்ளது.

பிரச்சனைகள் எழுந்தால், எல்லாரும் ஒன்றுகூடி, ஒருவர் சொல்வதை மற்றவர் கேட்டு, மரியாதை யோடும் தாழ்மையோடும் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு நாம் என்ன செய்யலாம்?

**வியாழன், ஆகஸ்ட் 23**

## எருசலேமிலிருந்து அனுப்பப்பட்ட நிருபம்

**ஆலோசனைச் சங்கத்தின் தீர்மானம் சம்பந்தமாக எருசலேம் கூட்டம் வேறு என்ன நடவடிக்கைகளையும் எடுத்தது? அப் 15:22–29.**

முதல் நடவடிக்கை என்னவென்றால், சங்கத்தில் தீர்மானிக்கப்பட்டவற்றை விளக்கி ஒரு நிருபம் எழுதினார்கள். அப்போஸ்தலர்கள் மற்றும் எருசலேமின் மூப்பர்களின் பேரில் அந்த நிருபம் எழுதப்பட்டது; எருசலேம் சபையின் வளர்ச்சியை அந்த அதிகாரப்பூர்வ ஆவணம் சுட்டிக்காட்டுகிறது. மற்ற கிறிஸ்தவ சபைகளைவிட எருசலேம் சபை அப்போஸ்தலர்களின் கண்காணிப்பில் இருந்ததே அதற்குக் காரணம். கி.பி. 49இல் அது எழுதப்பட்டது; அந்த வருடத்தில்தான் ஆலோசனைச் சங்கம் கூடியிருக்கவேண்டும்; எனவே, கிறிஸ்தவ ஆவணங்களிலேயே மிகப்பழமையான ஒன்றாக இந்த நிருபம் உள்ளது.

பவுல் மற்றும் பர்னபாவுடன் இரண்டு பிரதிநிதிகளை அந்தியோகியாவிற்கு அனுப்பவும் தீர்மானித்தார்கள்; அவர்கள் சீலாவும் யூதா என்கிற பர்சபாவும்; நிருபத்தைக் கொண்டுசென்று, அது சொல்வதை உறுதிப்படுத்தவேண்டியது அவர்களுடைய வேலை.

**நிருபத்தை வாசிக்கக் கேட்டதும் அந்தியோகியா சபையினர் செய்தது என்ன? அப் 15:30–33.**

நிருபம் வாசிக்கப்பட்டதும் சபையார் மிகுந்த சந்தோஷமடைந்தார்கள்; மனமாறுகிற புறஜாதியார் இனி விருத்தசேதனம்பண்ண அவசியமில்லை என்கிற ஊக்கமூட்டுகிற செய்தி அதில் இருந்தது. நான்கு விஷயங்களைக் தடைசெய்து அப்போஸ்தலர்கள் எழுதியிருந்த கட்டளைக்கு அவர்கள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. ஆரம்பக்காலச் சபையில் உண்டாயிருந்த மிகப்பெரிய பிளவு, குறைந்தபட்சம் எழுத்துப்பூர்வத்திலாவது சரிசெய்யப்பட்டது.

ஆலோசனைச் சங்கக் கூட்டத்தின் நிறைவில், எருசலேம் சபைத் தலைவர்கள் பவுலின் நற்செய்தியை முற்றிலும் அங்கீகரித்தார்கள். அந்த அங்கீகாரத்திற்கும் நம்பிக்கைக்கும் அடையாளமாக பவுலிடமும் பர்னபாவிடமும் தங்கள் வலதுகையை நீட்டினார்கள். கலா 2:9. ஆனால், இன்னமும் யூதப்பிரமாணத்தின்படியே வாழ்ந்த யூதக்கிறிஸ்தவர்கள் புறஜாதியாரோடு சேர்ந்து சாப்பிட மிகவும் தயங்கினார்கள்; சடங்காச்சார ரீதியில் அவர்கள் தீட்டுள்ளவர்களாக இருப்பதாகவே கருதினார்கள்.

பேதுருவும் அப்படி ஒரு சமயம் நடந்துகொண்டார். கலா 2:11-14. ‘‘சீடர்களும்கூட, ஆலோசனைச் சங்கத்தின் தீர்மானத்தை மனதார ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இல்லை’’ என்று எலன் ஒய்ட் எழுதுகிறார். *AA, p 197.*

பிற இனத்தை, கலாச்சாரத்தை, சமுதாய அந்தஸ்தைச் சேர்ந்தவர்களோடு அந்நியோந்நியமாக உங்களால் இருக்கமுடிகிறதா? மனதைத் தொட்டு பதில் சொல்லுங்கள். முற்றிலும் நற்செய்திக்கு எதிரான இந்த மனப்பான்மையிலிருந்து எவ்வாறு சுத்திகரிக்கப்படலாம்?

## மேலும் படிக்க:

'தேவன் தம் ஞானத்தினால் வழியைத் திறந்திருக்க, அதற்கு உடனே இணங்க விசுவாசிகளான யூதர்களுக்கு மனதில்லை. புறஜாதியாரின்மத்தியில் அப்போஸ்தலர்கள் ஊழியம்செய்ததின் விளைவாக யூதர்களில் மனமாறியவர்களைவிட புறஜாதியாரில் மனமாறியவர்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருந்தார்கள். சபையில் சேருவதற்கு பிரமாணத்தின் நிபந்தனைகளையும் சடங்காச்சாரங்களையும் கைக்கொள்ள வேண்டுமென்று புறஜாதியாரை நிர்பந்திக்காவிட்டால், யூதர்களின் தனி சிலாக்கியங்கள் இறுதியில் இல்லாமலே போய்விடுமெனப் பயந்தார்கள்; ஏனெனில், அந்தச் சிலாக்கியங்கள்தாம் இதுவரையிலும் அவர்களை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டின.' - *EGW, AA, p 189.*

'தேவாலயத்தைப் பார்க்கும் தூரத்தில் வாழ்ந்த யூதக்கிறிஸ்தவர்கள், இஸ்ரவேலின் யூதர்களாக தங்களுக்கிருந்த தனிப்பட்ட சிலாக்கியங்களை மீண்டும் நினைக்க ஆரம்பித்தார்கள். யூதேய மார்க்கத்தின் பாரம்பரியங்களிலிருந்தும், சடங்காச்சாரங்களிலிருந்ததும் கிறிஸ்தவ சபை விலகிச்சென்றதைக் கண்டதும், யூத சம்பிரதாயங்களில் கலந்திருந்த தனிச்சிறப்புமிக்க புனிதத்தன்மை புதிய விசுவாசத்தின் வெளிச்சத்தில் காணாமல் போய்விடும் என்று உணர்ந்ததும், இந்த மாற்றத்திற்கு பவுல்தான் பெரும்பாலும் காரணம் என்று எண்ணி, அநேகர் அவர்மேல் மிகுந்த கோபமடைந்தார்கள். சீடர்களும்கூட ஆலோசனைச் சங்கத்தின் முடிவை முழுமனதுடன் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இல்லை. சடங்காச்சாரப் பிரமாணத்தில் சிலர் வைராக்கியத்தோடு இருந்தார்கள்; யூதப்பிரமாணத்தின்படி செய்யவேண்டிய கடமைகளை அவர் வலியுறுத்தி பேசவில்லை என்று அவர்மேல் வெறுப்படைந்தார்கள்.' - *EGW, AA, p* 197.

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *'சரியான' சபையில் இருப்பதால்மட்டுமே, இரட்சிப்பு உறுதியெனச் சொல்லமுடியுமா என்று திங்கட்கிழமை சிந்தித்தோம். அதன் அர்த்தம் என்ன? உதாரணமாக, முற்கால இஸ்ரவேல்தான் 'சரியான சபை'; அதற்காக அங்கிருந்த அனைவருமே இரட்சிக்கப்படவில்லை. அப்படியானால், சரியான சபையில் அங்கத்தினர்களாக இருப்பதில், என்னதான் அனுகூலம் உள்ளது?*

2. *விருத்தசேதனம்பண்ணாத புறஜாதியாரை சபைக்குடும்பத்திற்குள் ஏற்றுக்கொள்வதுதான் ஆரம்பக்காலச் சபை நிர்வாகத்தில் பெரும் பிரச்சனையாக இருந்தது. அதேபோல இன்று நம் சபையில் காணப்படும் பிரச்சனைகள் யாவை? அவற்றைக் கையாள அப் 15இல் உள்ள உதாரணம் எவ்வாறு உதவக்கூடும்?*

3. *புறஜாதியார் சபையில் சேருவதற்குமுன் முதலில் யூதபாரம்பரியங்களைக் கடைப்பிடிப்பது, இஸ்ரவேலுக்குச் செய்யப்பட்ட உடன்படிக்கை வாக்குறுதிகளின்படி கட்டாயமென பலர் நினைத்திருந்தார்கள். எப்படி வாதிட்டிருப்பார்கள்? நீங்கள் என்ன பதில் சொல்லுவீர்கள்? இன்று நமக்கு அது தவறுபோலத் தெரியலாம்; ஏனென்றால், வேறொரு காலக்கட்டத்தில் வாழ்கிறோம்; அன்று அவர்களுக்கு அது எப்படி இருந்திருக்கும்?*